Registered as a Newspaper in Sri Lanka  பக்கங்கள்: 04  விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம்: 02  ஏப்ரல்  (08 - 04 - 1991)  திங்கட்கிழமை  ஓசை: 49

## ஒன்பது மாதங்களில் 158 மரணங்கள்

(செ. த. மை.)

சிறிலங்கா அரசின் பேரினவாத நடவடிக்கைகளால் 90 ஜூன் 15ஆம் திகதி தொடக்கம் 91 மார்ச் 23 வரை வடமராட்சிப் பகுதியில் 158 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இவர்களுள் போஷாக்கின்மையாலும், போதிய வைத்திய சிகிச்சை இன்மையாலும் அதிகமானோர் மரணமடைந்துள்ளனர். பிரசவத்தின்போது ஒரு (4ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் புலிகள் - இராணுவம் பல இடங்களில் மோதல்

## பல படையினர் பலி; நவீன ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு-அம்பாறை)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் கடந்த மூன்று தினங்களாக விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் பல மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இம்மோதல்களில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர், பல நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. புலிகள் தரப்பிலும் ஐவர் வீரமரணமடைந்துள்ளனர்.

இம்மோதல் சம்பவங்களில் இரண்டு கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்டன. இதில் ஒன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் ஒன்று அம்பாறை மாவட்டத்திலும் நடைபெற்றது. இம்மோதல் சம்பவங்களில் மட்டக்களப்பில் நடந்த மோதலில் மட்டும் பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல நவீன ஆயுதங்கள் மீட்கப்பட்டன. நான்கு புலிகள் வீரமரணமடைந்தனர்.

அடுத்த நாள் சனிக்கிழமையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் முகாமைவிட்டு வெளியேறிய இராணுவத்துடன் மோதல் சம்பவம் இடம்பெற்றது.

அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் நேற்றும் இரு மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் வெளியேறிய இராணுவத்தினருடன் மோதல் இடம்பெற்றது. அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் மினிமுகாம் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது. இதில் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

## முத்தமிழ் எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் விழா சிறந்த முன்னோடியாக எழுச்சிவிழா ஒன்று நேற்றுமாலை யாழ். கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவுக்கு யாழ். மாவட்ட பிரசாரப்பிரிவுப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் யாழ். மாவட்ட கலை, கலாசாரப் பொறுப்பாளர் சிட்டு ஆகியோரும் மற்றும் பலரும் வருகை தந்து உரையாற்றினர். (மு)

## தொண்டர் ஆசிரியர்களை மாகா.சபை நியமிக்கலாகாது -பிரேமதாசா

(அநுராதபுரம்)

மாகாணசபைகள் தொண்டர் ஆசிரியர்களை நியமிக்கப்படலாகாது. தொண்டர் ஆசிரியர்களைப்புதிதாகசேர்த்துக் கொள்ளும்போது அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு மாறான வகையில் தொண்டர் ஆசிரியர்களை நியமிக்கக்கூடாதென்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்தில் உரையாற்றும்போது கூறினார்.

புதிய நியமனங்களை வழங் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 32 ஆம் கட்டையில் 11 இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து பெறுமதிவாய்ந்த ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் பற்றித்தெரிய (4ஆம் பக்கம் பார்க்க)

## காவல் அரண்களாக நெல் மூடைகள்

மன்னார் மாவட்டத்திலுள்ள கோவில்குளம், ஆவணம், அச்சன்குளம் நறுவலிக்குளம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதியிலுள்ள தமிழர்களின் வீடுகளை உடைத்து அங்குள்ள நெல் மூடைகளை எடுத்து காவலரண்களை அமைத்துள்ளனர்.

## புலி பாய்ந்தகல் முகாம் இராணுவம்-புலிகள் மோதல்

(மட்டக்களப்பு)

நேற்றுக்காலை 6-45 மணியளவில் மட்டக்களப்பு புலி பாய்ந்தகல் இராணுவ முகாமில் இருந்த கோரக்கல்வி அடுத்த சிறிலங்கா இராணுவத்தினர் செங்கையில் அரசகட்டு என்னுமிடத்தில்வைத்து விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலால் இராணுவ தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை.

## யாழ். மாவட்ட சிறிலங்கா இராணுவத்தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்தினா புலிகளின் தாக்குதலால் காயம்

(கொழும்பு)

சிறிலங்கா ஆயுதப்படையின் யாழ்.மாவட்டத்தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்தினா வடபகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் ஒன்றின்போது காயமடைந்திருப்பதாக ரூபவாஹினி நேற்றுமாலை செய்தி வெளியிட்டது.

எனினும் எந்த இடத்தில் நடைபெற்ற மோதலில் காயமடைந்தார் என்பதையோ, எப்போது காயமடைந்தார் என்பதையோ ரூபவாஹினி விபரிக்கவில்லை. காயம்பட்ட பிரிகேடியர் விஜய விமலரத்தினாவின் தற்போதைய உடல்நிலை பற்றியும் ரூபவாஹினி விபரம் எதையும் தெரிவிக்கவில்லை.

எனினும் காரைநகர் கடற்படைத்தளப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலிலேயே பிரிகேடியர் காயமடைந்திருக்கக் கூடுமென ஊகங்கள் தெரிவிக்கப்படுகிறது.

## ஆலயடிவேம்பு ராணுவத்துடன் வெள்ளியன்று புலிகள் மோதல்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9-30 மணியளவில் ஆலயடிவேம்பு, வானாறு ஆகிய இராணுவ முகாம்களுக்கிடையில் வைத்து விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளது. சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை. புலிகள் தரப்பில் சங்கரன் என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார்.

## குப்பிளான் மோதலில் இரு புலிகள் வீரமரணம்

(நமது நிருபர்)

குப்பிளான் இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை தாக்குதல் நடத்தியவாறு வெளியேற முற்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலினால் நிலைகுலைந்த இரா (4 ஆம் பக்கம் பார்க்க)

## 16ஆம் கொலனி மினிமுகாம் இராணுவத்தினர் ஓட்டம் இரு புலிகள் வீரமரணம்

(அம்பாறை)

நேற்று அதிகாலை 12-30 மணியளவில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சின்னாளந்தைக்கும், 10ஆம் கொலனிக்கும் இடையிலுள்ள 16ஆம் கொலனியிலுள்ள பாடசாலையொன்றில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினருக்கும் அருகாமையிலிருந்த காவலரணில் நின்ற இராணுவத்தினர் மீதும் ஒரேநேரத்தில் விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலால் இராணுவத்தினர் பெரும் இழப்புகளுடன் சின்னாவத்தை சிங்களக் கிராமத்திற்கு ஓடிவிட்டனர். இந்தத் தாக்குதலில் இராணுவத்தினரின் சேதவிபரம் தெரியவில்லை.

இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:

- ★ ஜி3 ஏ3 ரக துப்பாக்கிகள் 3
- ★ [illegible] மகசின்-5
- ★ ரி. 56-1 ரக துப்பாக்கி 1

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் மூன்று தினங்களில் எட்டுப் புலிகள் வீரமரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் கப்டன் குமார், லெப். மனோ 2, ஆவது லெப். கமலேஸ் எட்வேட் ஆகிய நான்கு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

இதே தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மற்றொரு மோதல் சம்பவத்தில் ஈஸ்வரன் என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார்.

இதே பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் ஏற்பட்ட வெடி விபத்துச் சம்பவமொன்றில் 2 ஆவது லெப் மது (4ஆம் பக்கம் பார்க்க)

## மகிழவெட்டுவான் நோக்கி புறப்பட்ட இராணுவத்துடன் இருநாள் புலிகள் மோதல்

(மட்டக்களப்பு)

நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மொறக்கொட்டாஞ்சேனை, சந்திவெளி, செங்கலடி ஆகிய மூன்று இராணுவ முகாம்களில் இருந்து வெளியேறி மகிழவெட்டுவான் நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் செல்லமுயன்றபோது இடையில் வழிமறித்த விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். காலை ஒன்பது மணியிலிருந்து மாலை ஐந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**தேவை**

எனவீத்த சம்போ, ஒடிக்க சோக், Gum (கம்), Vjb போத்தல், பவுடர் டப்பா போன்ற பொதிண்ட பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும். சத்தியன், 55, மணிக் கூட்டு வீதி, கொழும்பு வருடிவோ விடுதி, யாழ்ப்பாணம். (B.2169)

**விலங்கியல் வகுப்பு !**

G.C.E.(A/L)91,92மீன்வகுப்புகளுக்கான விலங்கியல் பாடம் அனுபவம் வாய்ந்த பட்டதாரி, கல்லூரி ஆசிரியரால், தனிப் பட்ட முறையில் கற்பித்துக் கொடுக்கப்படும். தொடர்பு:- 68, பொற்பதி வீதி, கொக்குவில் (R-1219)

**தவறவிடப் பட்டுள்ளது**

இறப்புக் கோவையொன்று 4ஆம் திகதி அதிகாலையில் பூநகரி வீதியில் பரந்தனுக்கும் 8ஆம் கட்டை குடமுருட்டி ஆற்றிற்கும் இடையில் தவறி விழுந்துள்ளது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சியில் சந்திர பவானியிலோ யாழ்ப்பாணத்தில் ஈழநாதம் காரியாலயத்திலோ கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். சன்மானம் தரப்படும். (R1315)

**நீள் தூபம்**

நித்தம் புகைத்து நுளம்பு, பூச்சிதொல்லையின்றி நிம்மதியாக நித்திரை கொள்ளலாம். எங்கும் விற்பனையாகிறது. விலை ரூ.1.50மட்டுமே. மில்க் வைற்.

(B/2822)

## ரயில் விபத்தில் 56 பேர் பலி

(ஹவானா)

கியூபாவின் தலைநகர் ஹவானாவின் கிழக்கே இடம் பெற்ற ரயில் விபத்தொன்றில் 56 பேர் உயிர் இழந்துள்ளதாக கூறப்படுகிறது.

பொதுமக்கள் பிரயாணம் செய்து கொண்டிருந்த இந்த ரயில் தடம் புரண்டதிலேயே 56 பேர் உயிரிழந்ததாகவும், 241 பேர் காயமுற்றதாகவும் கியூபா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விபத்துக்குரிய காரணம் குறித்து விசாரிக்க கியூபா அரசாங்கம் விசேட ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளது.

## பரீட்சார்த்தமாக சிறு தானிய பயிர்ச்செய்கை

(சச்சமோகிடை)

பூநகரியில் உள்ள ஆலங்கேணிப் பகுதியில் சிறுதானிய பயிர்ச்செய்கை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பகுதியில் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு இங்குள்ள பொதுமக்களை விவசாயிகள் கேட்டுள்ளனர். இப்பயிர்ச் செய்கையில் பயறு, ளெபி என்பன பயிரிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (43)

## மகோற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு கண்ணை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இம் மாதம் பதினான்காம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்களுக்கு நடைபெறும்.

இருபத்தாறாம்திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், இருபத்தேழாம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் நடைபெற்று 29 ஆம் திகதி திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் மகோற்சவம் நிறைவுபெறும். (22)

## 21ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

**திரு. பொ. சோமசேகரம்**

(யாழ். தபாற்கந்தோர்-தபால் தரம்பிரிப்பாளர்)

தோற்றம் 10 . 12 . 1940 — மறைவு 19 : 3 : 1991

உங்கள் வாழ்நாளெல்லாம் எங்கள் நல்வாழ்வுக்காக அயராது உழைத்து எம்மை உயர்நிலையில் வைத்த அப்பா உங்களை என்றும் நாம் மறவோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (8.4 91) திங்கட்கிழமை 113 கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(R/1314) -மனைவி, பிள்ளைகள்.

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும்

**அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**

**வீரவேங்கை**

**கப்டன் 'இமடிசின் மாஸ்ரர்'**

(யோகநாதன் பிரதாபனன்)

வீரஜனனம் 19 - 12 - 1967 — வீரமரணம் 10 - 01 - 1991

விஞ்சிநின்ற பாசமெல்லாம் விலக்கிவைத்து
வீறுடன் தமிழீழத்தை மீட்கின்ற வேட்கையாலே
அஞ்சுவதை ஒதுக்கிவிட்டு அமைப்பிலோர் -
வேங்கையாகி
இன்னலுறும் வீரர்களின் விழுப்புண்ணாற்றும்
சங்கைமிகு சேவைதன்னில் உனை அர்ப்பணித்து
வீரமரணமதனைத் தழுவிநின்ற மாவீரனே,
கொட்டுகின்ற நீரருவி போலக் கண்ணீர்
அஞ்சலியே செலுத்துகின்றோம் அன்புச்
செல்வமே!

எங்கள் குலதீபமது அணைந்த ஞான்று சகல உதவிகளையும் முன்னின்று உதவியோருக்கும் விசேடமாக 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கத்தினருக்கும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினருக்கும், உற்றார், உறவினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

08-04-1991 திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் 09-04-91 அன்று வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்க அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

2 ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறை. — திரு. திருமதி யோகநாதன் சகோதர, சகோதரிகள்.

(R- 1301)

## மில்க்வைற் திரவ சவர்க்காரம்

MWS MILKWHITE

சகல தேவை அழுக்கு நீக்கி

*Milk White Liquid Soap*

**All Purpose Dirt Remover**

சாதாரண வீட்டுச் சலவைக்குப் பாவிக்கும் முறை

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. சலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் சலவை துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கும் பொலிவிற்கும் ஏற்ப அளவில் மாற்றம் செய்யவும்.

சகல ப. நோ. கூ. சங்கங்களிலும், கடைகளிலும் விற்பனையாகின்றது.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

(B-2311)

## நாளை ஆரம்பம்!

# PERSONAL
## NEW SCIENCE CENTRE

**Elilakam Front Lane, JAFFNA.**

**A/L 91 & 92 கணித விஞ்ஞான புதிய பகுதிகள்**

ஆரம்பம்; செவ்வாய் (9-4-1991) காலை 6 - 30

PHY : திரு. சத்தியசீலன்
CHE : திரு. செல்வா
ZOO : திரு. ஈஸ்வரநாதன்
BOT : திரு. பாலா
Pure / Applied: திரு. கலைநேசன்

—விபரங்கள் நேரில்

(B-2336)




## நினைவு கூருகின்றோம்

**1991 - 04 - 08**

வீரவேங்கை

**சுருளி**

(மகாலிங்கம் விஜயராசா)



1985ஆம் ஆண்டு இதே தினத்தில் பூநகரியில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த

**குமார்** (இரத்தினம் குமாரசாமி - பூநகரி)

1987ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**ஈசன்** (குமாரசேகரம் கணநாதன் - திருமலை)

இதே ஆண்டு கோப்பாய் பாலத்தில் சிறிலங்கா படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**சுருளி** (மகாலிங்கம் விஜயராசா - சாவற்காடு, மானிப்பாய்)

**சிவா** (சுப்பையா இறிராஜேஸ்வரன் - வவுனியா)

**செனித்** (ந. ஜெயப்பிரகாஷ் - நயினாதீவு)

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் அருந்தி வீரமரணமடைந்த

**லெப்.சுதர்சன்** (சச்சிதானந்தம் தர்மன் புஸ்பராசா - இராசன்)

**யோசப்/மாமா** (நாகமணி சித்திரன் - வாழைச்சேனை)

இதே ஆண்டு சந்திவெளியில் இந்தியப்படை சுற்றிவளைப்பின் போது சயனைட் அருந்தி வீரமரணமடைந்த

**நிக்ஸன்** (பிள்ளையான் சர்வராசா - சந்திவெளி)

1989ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் சயனைட் அருந்தி வீரமரணமடைந்த

**லெப்.குட்டி** (மரு.சுப்பு யோகேஸ்வரன்-நெடுந்தீவு மேற்கு)

**கஜன்**

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/2327)

### ❁ சிந்தனைக்கு ❁

புறத் தோற்றங்கள் மிக அற்பமானவையாக இருப்பினும், இன்னமும் உலகம், அணி, ஆபரணங்களைக் கண்டு மயங்கி ஏமாறவே செய்கிறது.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்; 08.04.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## இந்திய ஜனநாயகத்தில் தோன்றும் நல்ல சகுனம்?

இந்திய லோக்சபாத் தேர்தலுடன் சேர்த்து பல சட்டசபைத் தேர்தல்களும் நடைபெறப் போகின்றன. ஓர் இடைக்கால லோக்சபாத் தேர்தல் என்றநிலை மாறி ஒரு பொதுத்தேர்தல் என்ற நிலை உருவாகி உள்ளது.

ஒன்பதாவது இந்திய மக்களவை கலைக்கப்பட முன்னரும் பின்னரும் பல சட்டசபைகள் கவிழ்க்கப்பட்டன, சில மத்திய அரசால் கலைக்கப்பட்டன. சில மாநில அரசாங்கத்தால் கலைக்குமாறு சிபார்சு செய்யப்பட்டன. ஜனாதிபதியால் கலைக்கப்பட்ட மாநில அரசாங்கங்களின் வரிசையில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கோவா, அஸாம், ஹரியான சட்டசபைகள் அடங்குகின்றன. தோழமைக்கட்சிகளினால் கவிழ்க்கப்பட்ட வரிசையில் உத்தரப்பிரதேசம் அடங்குகின்றது. மேற்குவங்காளம், கோவா என்பன சட்டசபைகளைக் கலைக்குமாறு மத்திய அரசிற்கு சிபார்சு செய்த மாநிலங்களின் வரிசையில் இடம் பெறுகின்றது. குஜராத் மாநில முதலமைச்சரோ ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக புதிய பிராந்தியக் கட்சியை அமைத்து ஆட்சியைக் காப்பாற்றிக் கொண்டுள்ளார்.

இம் மாநில அரசாங்கங்கள் கலைக்கப்பட்டமைக்கும், கவிழ்க்கப்பட்டமைக்கும் காங்கிரஸ் கட்சியே பிரதான காரணமாகும். இதனை இந்திரா காங்கிரஸ் மறுத்தாலும் அதனை ஏற்றுக் கொள்வதற்கு எவரும் தயாராகவில்லை. அத்தோடு காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளுக்கெல்லாம் இந்திய ஜனாதிபதி விட்டுக் கொடுத்தும் பக்கச்சார்பாக நடந்துகொண்டார் எனப் பலமான குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன. இவ்விடயத்தில் இந்தியாவின் உயர் பதவியான ஜனாதிபதிப் பதவியே கேள்விக்குரியதாகியுள்ளது.

இந்திய அரசியலில், சட்ட சபைக் கலைப்புக்கள் புதியதொரு விடயமல்ல. இதில் எப்பொழுதும் காங்கிரஸ் கட்சியின் பங்கு கணிசமான அளவு இருந்தே வந்துள்ளது. ஆனால், இதற்குத் தனியாக இந்திரா காங்கிரஸ் கட்சியை மட்டும் குறை சொல்லிக் கொள்வதிலும் நியாயம் இல்லை.

இந்திரா காங்கிரஸ் கட்சியை மக்கள் புறக்கணித்து இரண்டுமுறை எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் வாக்கு அளித்துள்ளார்கள். ஒரு தடவை (1977) தெளிவான பெரும்பான்மையுடன் காங்கிரஸ் அல்லாதவர்களை (ஜனதாகட்சி) பாராளுமன்றம் அனுப்பினார்கள். பின்னர் (1989) காங்கிரஸ்ஆட்சி அமைக்க முடியாத அளவிற்கு எதிர்க்கட்சிகள் சிலவற்றைப் பாராளுமன்றம் அனுப்பினார்கள். ஆனால், அவர்களால் ஆட்சியை திறம்பட நடத்தமுடியவில்லை.

மக்களின் தீர்ப்பைப் புரிந்து கொள்ள முடியாதவர்களாலும், அதிகார ஆசை கொண்டவர்களாலும் ஓர் நிலையான ஆட்சியை 5வருட ஆட்சிக்காலத்திற்கும் கொடுக்க முடியவில்லை. மாறாக தமது பதவிக்காகவும் அதிகார ஆசைக்காகவும் கட்சிகளை உடைத்துச் சென்றார்கள். இதனால் ஒரு பலவீனமான நிலையைத் தோற்றுவித்தார்கள். காங்கிரஸ் தன் விருப்பப்படி செயற்படவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

இந்நிலையில் தேர்தல் வந்ததும் மீண்டும் எம்.பி. பதவிக்காகக் கூட்டுகள்பற்றிப் பேசுகின்றார்கள். ஓரளவு தேர்தல் உடன்பாடுகளும் ஏற்பட்டுவிட்டன. ஆனால் இம்முறைகடைசியாக ஆட்சியில் இருந்த சந்திரசேகரின் ஜனதாதள(எஸ்)த்துடன்எவரும்சேரவோ அல்லதுசேர்க்கவோதயாராகவில்லை. ஜனதாதள (எஸ்)ஒரு தீண்டத்தகாத கட்சியாக சகலராலும் ஒதுக்கப்பட்டு விட்டது.

சந்திரசேகரின் ஜனதாதள எஸ்ஸிற்கு கிடைத்த படிப்பினை சீர்கேடான இந்திய ஜனநாயகத்திற்குள் தோன்றியுள்ள நல்லதொரு வெளிப்பாடாகும். இவ் வெளிப்பாடு வளர்ச்சி பெறுமானால் அதிகார ஆசையால் கட்சிகளை உடைப்பவர்களுக்கும், தாவுபவர்களுக்கும் நல்லதொரு படிப்பினையாக அமையும். இந்தியஜனநாயகத்திற்குப் ஆரோக்கியமாக அமையும்.

# சத்துமிக்க உழுந்தை உணவாக்கி
# ஆரோக்கியம் பெறுவோம்

நமது மண்ணில் தாராளமாக விளைவிக்கக்கூடிய தானியம் உழுந்து ஆகும். போஷாக்குச்சத்துக்கள் நிறைந்த உழுந்தினைக்கொண்டு பலவிதமாக உணவுப்பதார்த்தங்களை நாம் தயாரிக்க முடியும். எனவே, நமது நாளாந்த உணவில் உழுந்தை பெருமளவு பயன்படுத்திக்கொள்ள பழக்கிக்கொள்ளல் வேண்டும்.

உழுந்து உற்பத்தியில் போதிய கவனம் செலுத்தி அதனை நாளாந்த உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் தற்போதுள்ள பொருளாதாரத்தடைக்கெதிரான மாற்றீடுகளை மேற்கொள்வதுடன் போஷாக்கினை வளர்த்துக் கொள்பவர்களாகவும் நாம் செயற்பட முடியும்.

வைத்தியசாலை நோயாளர்கள், தாய்மார், குழந்தைகள் ஆகியோருக்கு உழுந்துணவை அறிமுகம் செய்து வைப்பதோடு, உழுந்தின் போஷாக்குத்தன்மை அதன் முக்கியத்துவம் பற்றி போதியளவு மக்களுக்குப் பிரசாரம் செய்தலும் அவசியமாகிறது.

தோசை, இட்டலி, சத்துமா, உழுந்தங்களி, வறுத்தவித்தல், பிட்டு (ஆவிகாய்ப்பிட்டு) போன்ற காலை உணவு வகைகளையும், உழுந்தங்கறி, அப்பளம், வடகம், வடைக்கறி, வறுத்த உழுந்துத்துவையல் முளை எடுத்த உழுந்துக்கறி, உறைப்புக்கூழ் போன்ற மதிய உப உணவு வகைகளையும், வடை முறுக்கு தட்டை வடை, சத்துமா, பொறிவிளங்காய், சீடை, உழுந்தம்மா இற்றுண்டி, இறால் உழுந்தம்மா பிஸ்கட், இனிப்புஉழுந்தங்கூழ், தோசைப்பாகு, எள்ளு - உழுந்துப்பாகு, முட்டைமா, போளி, கொழுக்கட்டை, மோதகம், சுகியம் போன்ற சிற்றுண்டி வகைகளையும் உழுந்திலிருந்து தயாரித்துக்கொள்ள முடியும்.

உழுந்தில் 24.0 கிறாம் புரதம் 59.6கிறாம் மாப்பொருள் 1.4 கிறாம் கொழுப்பு 9.1 மி.கி. இரும்பு, 347 கி. கலோரி சக்தி ஆகிய சத்துக்கள் அடங்கியுள்ளன.

எனவே, உழுந்தை பெருமளவு பயிர் செய்வதோடு உணவிலும் போதியளவு பயன்படுத்திக் கொண்டு போஷாக்குடன் வாழ முயல்வோமாக.

— தமிழீழ ஆய்வு நிறுவனம்

க. பொ. த. (சா) பரீட்சை

## 1990இல் நடைபெறாமையினால் வகுப்பறையில் இடநெருக்கடி

(நல்லூர்)

டிசம்பர் 1990இல் நடந்திருக்க வேண்டிய க.பொ.த (சாதாரணம்) பரீட்சை வடக்கிலும், கிழக்கிலும் இடம் பெறவில்லை. கிழக்கில் ஒருசில நிலையங்கள் மட்டுமே இயங்கின. வடக்கில் முற்றாகப் பரீட்சை நிலையங்கள் செயற்படவில்லை.

1991ஆம் ஆண்டு க.பொ.த (சாதாரணம்) வகுப்பு மாணவர்கள் வகுப்பறைகளில் நிறைந்திருப்பதால், 1990ஆம் ஆண்டுக பொ.த.(சாதாரண) மாணவர்கள் வகுப்பறைவசதி இல்லாது கஷ்டப்படுகிறார்கள். அதுவும் இராணுவ நடவடிக்கையினால்பாதிக்கப்பட்ட தேசிய பாடசாலையான வேம்படியிலும், இதுபோன்ற ஏனைய பாடசாலைகளிலும் இட நெருக்கடி பெரும் பிரச்சினையாகவுள்ளது. புலமைப் பரிசில் பரீட்சை முடிந்து க.பொ.த.(உயர்தரம்) பரீட்சைக்கும் திகதி குறித்தாகி விட்டது. 1990 டிசம்பர் க.பொ.த. (சா) பரீட்சை பற்றி எவரும் கவலைப்படுவதாக தெரியவில்லை. யாழ். பிரதேசக்கல்வித் திணைக்களம் தலையிட்டு பரீட்சைக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

## மரடோனாவிற்கு 15 மாதத்தடை

(ரோம்)

உலகப் புகழ் பெற்ற கால்பந்தாட்ட வீரர் மரடோனா 15 மாத காலத்திற்கு கால்பந்துப் போட்டிகளில் விளையாட இத்தாலிய ஒழுங்குக் கட்டுப்பாட்டுச் சபை தடை விதித்துள்ளது.

நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் இதனை தெரிவித்த மேற்படி சங்கத்தின் நிர்வாகம் இத்தாலியில் சென்றமாதம் நடைபெற்ற லீக் பந்தயத்திற்கு முன்னர் மரடோனா 'கொக்கைன்' போதைப் பொருள் பயன்படுத்தியதற்காக அவருக்கு இத்தத் தடையை விதித்ததாக தெரிவித்தது. இந்தத் தடை உடனடியாக செயல்படுத்தப்படும் என்றும் கூறியது.

இதேவேளை மரடோனா உலகெங்கிலும் விளையாடாதிருக்க இத்தத்தடை வழிவகுக்கிறது என்று சர்வதேச கால்பந்தாட்ட பராமரிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

## உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது

(பீகிங்)

ஈராக்கின் உள்விவகாரங்களில் தலையிடுதல் ஆகாதென்றும் அதன் பிரதேச ஒருமைப்பாடு மதிக்கப் பட வேண்டும் என்றும் சீனா கூறியுள்ளது.

நேற்று முன் தினம் பீகிங்கில் சீன வெளியுறவுத் துறை அமைச்சர் கியான் கிசென் பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சர் டக்ளஸ்ஹேர்ட்டைச் சந்தித்து பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

வளைகுடாப் பகுதியில் இருந்தும் வெளிநாட்டுமற்றும் அயல் நாட்டுத் துருப்புக்கள் விரைவாக வெளியேற வேண்டும் என கியான் கிசென் கேட்டுக் கொண்டார்.

இதே வேளை பிரித்தானிய வெளியுறவுஅமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் ஈராக்கின் பிரதேச ஒருமைப்பாடு மதிக்கப்பட வேண்டிய அதே நேரம் அங்குநிலவும் குழப்பமான நிலைநீங்கவேண்டும் எனக் கூறினார்.

## சிம்லா உடன்படிக்கையின்படி காஷ்மீருக்குத் தீர்வு

### -வில்லியம்கிளார்க்

(ஹைதராபாத்)

காஷ்மீர்விவகாரம் தொடர்பாக ஏற்பட்ட சிம்லா உடன்பாட்டிற்கு அமைய இந்தியாவும், பாகிஸ்தானும் தங்களுக்கிடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என இந்தியாவிற்கான ஐ.நா. தூதுவர் வில்லியம் கிளார்க் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய வில்லியம் கிளார்க் சிம்லா உடன்படிக்கையைஅமெரிக்கா ஆதரிக்கிறது என்றும் பேச்சுவார்த்தை மூலம் இருநாடுகளும் தங்களுக்கிடையிலான பிரச்சினையை தீர்த்துக் கொள்ளமுடியும் என்றே அமெரிக்கா நம்பிக்கை வைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிராந்திய நாடுகளுக்குச் செல்ல

## 'சார்க்' பத்திரிகையாளருக்கு விசா இன்றி அனுமதி

(காட்மண்டு)

சார்க் நாடுகளைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் சார்க் நாடுகளில் விசா கட்டுப்பாடுகள் எதுவுமின்றிச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். தகவல்துறையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்த இது உதவும்.

காட்மண்டுவில் அண்மையில் நான்குநாள் முடிவடைந்த சார்க் நாடுகளின் பத்திரிகையாளர் மாநாட்டில்இதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானில்

## வெளியார் தலையீட்டால் புதிதாகச் சண்டை

### -இந்தியா கவலை

(புதுடில்லி)

ஆப்கானிஸ்தானில் வெளியார் சக்திகள் சம்பந்தப்பட்ட வகையில் புதிதாக சண்டை மூண்டிருப்பது குறித்து இந்தியா தனது கவலையை தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையில் ஜெனிவா ஒப்பந்தம் மற்றும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களுக்கு இசைவாக இராணுவ நடவடிக்கைகள் அமைவதில்லை என்பதில்தான் பாரதம் எப்பொழுதும் நம்பிக்கை கொண்டிருக்கின்றது என்றார். எனினும் ஆப்கான் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை இச்சண்டை பாதிக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

## விபரம் தரவும்

(டெல்லி)

ஹரியானா ஆந்திரப்பிரதேச மாநில அரசுகள் இரண்டும் நில விநியோகம் செய்ததாகவும், சில புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதாகவும் கூறப்படும் தகவல்கள் பற்றி விவரம் தருமாறு அந்த மாநில அரசுகளைத் தேர்தல் ஆணைக்குழு கோரியுள்ளது. தேர்தலுக்குத் திகதி அறிவித்தபிறகு இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது தேர்தல் சட்ட விதிகளுக்கு மாறானதாகும்.

## விளையாட்டு வினையாக முடிந்தது

(செ. த. மை.)

விளையாட்டுக்காக சாறி ஒன்றை கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு படுத்திருந்த சிறுமி, மூடிச்சு இறுகிப் போய் மரணமானார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த நிமாலினி செல்லையா (11 வயது) என்பவரே மரணமானவராவர்.

கடந்த 5ஆம் திகதி இரவு பெற்றோர் வெளியே சென்றிருந்த சமயம் இச்சம்பவம் இடம் பெற்றது.

## பாகிஸ்தானிலும் சீன தயாரிப்பு

# குறுந்தூர பாலஸ்டிக் ஏவுகணை செலுத்தும் வாகனங்கள்

(வாஷிங்டன்)

பாகிஸ்தானில், சீனாவில் தயாரிக்கப்பட்ட குறுந்தூர பாலஸ்டிக் ஏவுகணைகளைச் செலுத்துவதற்கான வாகனங்கள் இருப்பதை அமெரிக்க உளவு விசாரணை அமைப்புக்கள் அண்மையில் கண்டு பிடித்திருப்பதாக அமெரிக்க நாளேடான வாஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது.

இதனால் பாகிஸ்தானும், சீனாவும் ஏவுகணை பேரம் செய்து கொண்டிருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படுவதாக அந்த நாளேடு தெரிவித்திருக்கிறது.

முன்னதாக சீனா ஏவுகணைகளை விற்கப் போவதும் இல்லை. வாங்கப்போவதும் இல்லை என அமெரிக்காவிற்கு வாக்குறுதி அளித்திருந்த போதிலும் இந்த ஏவுகணை பேரம் நடந்திருக்கலாம் என்று வாஷிங்டன் போஸ்ட் எழுதியுள்ளது.

இதேவேளை பாகிஸ்தானுக்கு சீனா ஏவுகணை விற்றது குறித்து அமெரிக்க அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக எதுவும் தெரியாது என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## தவறிவிழுந்து மரணம்

(செ. த. மை.)

கிணற்றில் குளித்துக்கொண்டிருந்த சிறுவன் தவறிவிழுந்து மரணமானான்.

புத்தூர் கிழக்கு, கோட்டுதனை என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கடந்த 5ஆம் திகதி மாலை செ. உதயசூரியன் (வயது 11) என்னும் சிறுவன் வீட்டுத்தோட்டக் கிணற்றில் வாளியினால் நீர் அள்ளிக் குளித்துக் கொண்டிருந்த சமயம் கிணற்றுள் விழுந்து மரணமானான்.

## பொலிஸ் நிலையம் மீது

# தமிழ்நாட்டில் தாக்குதல் ஒரு பொலிஸார் பலி

(சென்னை)

தமிழ்நாட்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் புத்தூர் பொலிஸ் நிலையத்தை நேற்று அதிகாலை ஆயுததாரிகள் சிலர் தாக்கியதில் ஒரு பொலிஸார் கொல்லப்பட்டார். நான்கு பொலிஸார் காயமடைந்துள்ளனர். அதிகாலை மூன்று மணியளவில் சுமார் முப்பது இளைஞர்கள் இந்தப் பொலிஸ் நிலையத்தின் மீது படையெடுத்து நாட்டு வெடிகுண்டுகளாலும், இரும்புக் கம்பிகளாலும் தாக்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பல காவல்துறை உயர் அதிகாரிகள் புத்தூரில் முகாமிட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நிறைவுகுறைவு புகார்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க மாதனைக் கிளையில் உலர் உணவு விநியோகத்தில் நிறைகுறைவு மோசடி இடம்பெறுவதாக பாவனையாளர்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தலைவரிடம் புகார் செய்துள்ளனர். (25)

# காரைநகரில் குண்டு வீச்சு பல வீடுகள் சேதம்

(காரைநகர்)

காரைநகரின் பல பகுதிகளிலும் சிறிலங்கா வான் படைகளின் குண்டுத்தாக்குதல்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று நண்பகல் வரை தொடர்ந்து இடம் பெற்றதில் பொதுமக்களின் பல வீடுகள், சில வர்த்தக நிலையங்கள் போன்றவை பலத்த சேதமடைந்துள்ளன.

சிறிலங்கா விமானப் படையினரின் நான்கு வாச்செட்டி ரக குண்டுவீச்சு விமானங்கள், ''அவ்ரோ'' விமானங்கள், வை-12 ரக விமானம், இரண்டு ஹெலிகொப்டர்கள் மற்றும் சீபயர்னென் ஆகியவற்றின் மூலம் காரைநகரின் பல பகுதிகளிலும், பொன்னாலைப் பகுதியிலும் பல முறை தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

வலந்தலை, களபூமி, புதுறோம், பறையண்டி; மன்றோம் ஆகிய பகுதிகளில் நடாத்தப்பட்ட தாக்குதல்களில் பொதுமக்களின் பல வீடுகளும் சில வர்த்தக நிலையங்களும் சேதமடைந்தன. இவ்விமானங்கள் கடற்படைத்தளத்தை அண்டிய பகுதிகளிலும் குண்டுத் தாக்குதல்களை நடாத்தியது. இத் தாக்குதல்களின்போது ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை. சில பகுதிகளில் ஹெலிகொப்டர்கள் தாளப்பறந்து தாக்குதல் நடாத்த முயற்சித்த சமயம் விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதலைத் தொடுத்தபோது ஹெலிகொப்டர்கள் பின்வாங்கிச் சென்றன.

வை-8 ரக விமானங்கள் பொன்னாலைப் பாலப்பகுதியில் பல குண்டுகளை வீசித் தாக்குதலை நடாத்தியது. எனினும் பெரியளவிலான சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

நேற்றையதினம் ஹெலிகொப்டர் ஒன்று பகல் முழுவதும் இப்பகுதிகளில் பல தடவைகள் கலிபர் தாக்குதல்களை நடாத்திய வண்ணமிருந்தன. சீப்பிளேன் ஒன்றும் வட்டமிட்டு நோட்டமிட்டது. (ஈ)

# நயினாதீவில் இருந்து புங்குடுதீவு மீது செல் வீச்சு

(புங்குடுதீவு)

இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நயினாதீவு சிறிலங்கா கடற்படை முகாமில் இருந்து புங்குடுதீவை நோக்கி கோர ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வருகின்றது. தினமும் தொடர்ச்சியாக நடாத்தப்படும் இத் தாக்குதலின்போது ஏவப்படும் ஏராளமான ஷெல்கள் குறுகாட்டுவான் துறையிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வீழ்ந்து வெடிக்கின்றன. இதனால் குறிகாட்டுவான் துறையில் உள்ள கடைகள், கட்டடங்கள் என்பனவற்றுடன் பொதுமக்களின் வீடுகள் பலவும் சேதமடைந்துள்ளன. அத்துடன் மேற்படி தாக்குதலினால் குறிகாட்டுவான் பகுதி கடந்த சில தினங்களாக ஒரே புகை மண்டலமாகவே காட்சியளித்து வருகின்றது; ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கும் போது கேட்கும் பாரிய ஓசையினால் புங்குடுதீவே அதிர்ந்து வருகின்றது. (22)

## செல்லவில்லை

விசேட சிகிச்சைக்காக நேற்று கொழும்பு அழைத்துச் செல்லப்படவிருந்த நோயாளிகள் அழைத்துச் செல்லப்படவில்லை.

திடீர் வரட்சியின் காரணமாக கப்பல் புறப்படுவதற்கு தாமதமேற்பட்டமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இன்று அழைத்துச் செல்லப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஈ)

*புறப்பட்ட*

மணிவரை நீண்ட நேரம் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலால் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டது. சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை.

இதேவேளைநேற்றைய தினமும் அதே இடத்தில் நின்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். காலை 6.30 மணியில் இருந்து 9 மணிவரை இத்தாக்குதல் நீடித்தது. இத்தாக்குதலால் சிறிலங்கா இராணுவத்தினர் பெரும் இழப்புகளுடன் முகாம் நோக்கிப் பின்வாங்கிச் சென்றனர். சேதஎண்ணிக்கை விபரம் தெரியவில்லை.

*தொண்டர்*

கூடபோது அரசாங்கத்தின் கொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தினார்.

ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 59,000 பேர் பயிற்சி ஆசிரியர்களாகவும், மற்றும் ஆசிரியர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஒருகால திறம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு போட்டிப்பரீட்சைகளின்மூலம் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அமையும். ஏனைய அரசாங்கத்திணைக்களங்களிலும் இதுபோன்ற நடவடிக்கை பின்பற்றப்படும் என்றும் பிரேமதாசா தெரிவித்தார்.

*ஒன்பது*

தாயும், உயிரற்றுப் பிறந்த இரு சிசுக்களும், மூச்சுத்திணறல், நிறைகுறைவு போன்றவற்றால் ஒரு வயதுக்குக் குறைந்த 26 குழந்தைகளும், நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் 89 பேரும், விபத்துக்களினால் 7 பேரும், வான் தாக்குதல், எறிகணைத் தாக்குதல், துப்பாக்கிப்பிரயோகம் போன்றவற்றால் 33 பேரும் மரணமடைந்துள்ளனர்.

இந்த விபரங்கள் பருத்தித்துறை (மந்திகை) ஆதார வைத்தியசாலையிலிருந்து பெறப்பட்டவையாகும்.

*கிழக்கில்*

மட்டக்களப்பு) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை அம்பாறை மாவட்டத்தில்சிறிலங்காஇராணுவத்தினருடனான மோதலில் சமீர் (பெரியபோரதீவு மட்டக்களப்பு) ஆனந்தகுமார் (கொக்கட்டிச்சோலை மட்டக்களப்பு ஆகிய இரு போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஆனையிறவு இராணுவ முகாம் இராணுவத்தினருடனான மோதலில் காயமடைந்த மைக்கல் (அன்ரனி ஜெபநேசன் ஜீவநாயகம் மிருசுவில் வடக்கு, மிருசுவில்) என்ற போராளி நேற்று வீரமரணமடைந்துள்ளார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

*16ஆம் கொலனி*

★ ரி. 56-2 ரக துப்பாக்கி-1
★ மகசின் 12
★ ஐ. எம். ரவைகள் 2500
★ தோட்டா ரவைகள் 100
★ சொட்கன் சாப்பு 10
★ கிளைமர் 8

ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களாகும்.

*குப்பிளான்*

ணுவத்தினர் குழப்பங்களுடன் முகாம் திரும்பினர் அதே வேளை விடுதலைப்புலிகள் தரப்பில் இருவர் வீரமரணமடைந்தனர்.

ஞானம் (மணியம், வீரசிங்கம், மாவடிச்சேனை மூதூர்) கபன் (கணபதிப்பிள்ளை, குலேந்திரராசா ஆலங்கேணி, திருமலை) ஆகியோரே வீரமரணமடைந்தவர்களாவர்.

இவர்களின் புகழுடல்கள் இன்று காலை 9 முதல் 12 மணிவரை யாழ். கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

தொடர்ந்தாற்போல் அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் உரைநிகழ்த்துவர்.

*32ஆம் கட்டையில்*

வருடத்தாவது கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பனிச்சங்கேணி இராணுவ முகாமில் இருந்து திருமிச்சை இராணுவ முகாமிற்கு 25க்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் சென்று கொண்டிருந்த போது 32 ஆம் கட்டையில் வைத்து விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர், இத் தாக்குதலில் பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு

★ ஏ. கே. எல். எம். ஜி. - 01
அதற்குரியறம்மகஸீன்-06
★ ரவை - 550
★ ரி.56 I ரகத்துப்பாக்கி - 1
★ ரி. 56. II „ „ - 05
★ மகஸீன் - 23
★ ரி. 81 ரகத்துப்பாக்கிகள் - 65
★ மகஸீன் - 08
★ ஐ எம் றவைகள் - 1090
★ நேட்டோரவைகள் - 100
★ ஜி பி. எம் ஜி லிங். - 531
★ ஜி. ஆ. கைக்குண்டுகள் - 02

# மன்னாரில் அப்பாவி தமிழர் கோரமாக வெட்டிக்கொலை

## இருபெண்கள்மீதுபாலியல்வன்முறை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் மூன்று தமிழ்ப் பொதுமக்கள் கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப் பட்டுள்ளார்கள். இரண்டு பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இன்னும் சிலர் காணாமற் போயுள்ளனர்.

மன்னார்மாவட்டத்தில் இம் மாதம் முதலாம் திகதியிலிருந்து நான்காம் திகதிவரை அச்சன்குளம், நறுவிலிக்குளம் ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இதில் ஜேசுதாய்பா (வயது 26, வங்காலை) செபமாலை (வயது 52, நறுவிலிக்குளம்) ஆ. சவிலிராஜன் குரூஸ் (வயது 40, வங்காலை) ஆகியோரை இராணுவத்தினர் துண்டு துண்டாக வெட்டி சாக்கினுள் கட்டி கிணற்றினுள் போட்டுள்ளனர். யோ. ரதி (வயது 16 புதுக்கமம்) உட்பட இரண்டு இளம் பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். மேலும் அருள்வாசம் (வயது 40 வஞ்சியான்குளம், திமிங்கு (வயது 63) ஆகியோரும் பாலியல் வன்முறைக்குள்ளானவர். ரதி என்பவரும் காணாமற்போயுள்ளனர்.

இதே பகுதியில் மூன்று வீடுகள் சிறிலங்கா இராணுவத்தினரால் எரிக்கப்பட்டுள்ளன.

# விமானக் குண்டு வீச்சால் பாதை முற்றாகச் சேதம்

(மன்னார்)

கேரதீவில் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த இரு குண்டுவீச்சு விமானங்கள் நேற்று மேற்கொண்ட விமானத் தாக்குதலில் பாதை முற்றாகச் சேதமடைந்தது.

நேற்றையதினம் முற்பகல் 11.40 மணி தொடக்கம் 12.10 மணிவரை இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் கோதீவு இறங்குதுறையில் நான்கு குண்டுகளை வீசின. பின்னர் மீண்டும் 12.10 மணிக்கு வந்த குண்டுவீச்சு விமானங்கள் 12.30 மணி வரைமேலும் நான்கு குண்டுகளை வீசின. இத்தாக்குதலால் இங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாதை முற்றாக சேதமடைந்தது. இத்துடன் வீதியும் சேதமடைந்தது.

இதனைத் தொடர்ந்து பி.ப 12.30 மணியளவில் இரண்டு ஹெலிகொப்ரர்கள் இப்பகுதியில் 50 கலிபர் தாக்குதலை நடாத்தின. பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக் கொண்டதால் உயிர் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. (மு)

## மணிப்புரியில் மீண்டும் இயங்குகிறது

(யாழ்ப்பாணம்)

கடந்த எட்டு மாத காலமாக இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இயங்காதிருந்த கற்பகம் மணிப்புரி இக்கடனுதவி கூட்டுறவுச் சங்கமானது மீண்டும் இயங்கத் தொடங்கவுள்ளது.

மணிப்புரி கிராம அபிவிருத்திச் சங்க காரியாலயத்தில் 32 பொதுச்சபை உறுப்பினர்களுடன் திரு க. பாலசுப்பிரமணியம் தலைமையில் நேற்று மாலை 4.30 மணியளவில் கூடிய கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.